# லங்காபுர பிரதேச சபை

# பொலன்னறுவை மாவட்டம்

---

1. நிதிக் கூற்றுக்கள்

---

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

---

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மே 08 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மே 26 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஜூலை 30 திகதி சபையின் செயலாளரிற்கு அனுப்பப்பட்டது.

1.2 அபிப்பிராயம்

---

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடபட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு லங்காபுர பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பிரதேச சபையினால் தீர்க்கப்பட வேண்டியிருந்த நிர்மாண வேலை கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர்களின் பெறுமதியினை இனங்கண்டு நிதிக் கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) சட்டரீதியாக சபைக்கு அறவீடு செய்வதற்கான அதிகாரம் ஒன்று காணப்படாத வியாபாரம் செய்யும் உரிமையை வாடகைக்கு கொடுக்கும் வருமான நிலுவை ரூபா 456,134 தொகையினை கிடைக்க வேண்டிய வருமானம் என கணக்கீடு செய்யப்பட்டுள்ளமையால் ஆண்டிற்கான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் அதே தொகையால் மிகையாக காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டு இறுதியாக உள்ளவாறு நீர்க் கட்டண வருமான நிலுவை ரூபா 94,175 தொகை, நிதிக் கூற்றுக்களில் கைவிடப்பட்டுள்ளது.

(ஈ) உள்நாட்டு கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியக் கடன் தவணைப் பணக் கொடுப்பனவை போக்குவரத்து தொடர்பாடல் தேவைகள் மற்றும் சேவைகளின் கீழ் மீண்டுவரும் செலவுகள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் மீண்டுவரும்

செலவுகள் ரூபா 122,117 இனால் மிகையாகவும் மூலதனச் செலவுகள் அதே தொகையால் குறைவாகவும் காட்டப்பட்டிருந்தன.

(உ) உள்ளூராட்சி மாகாண சபை மற்றும் உள்நாட்டு விவகார அமைச்சில் இருந்து மீளாய்வாண்டின் போது வழங்கியிருந்த போடன் டிரம் டிரக் வண்டியின் பெறுமதி பற்றிய தகவல்கள் வழங்கப்படாமையால் குறிப்பிட்ட சொத்தின் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் கைவிடப்பட்டுள்ளது.

(ஊ) பிரதேச சபைகளின் கணக்கீட்டு முறைமையின் பிரகாரம், மூலதன ஈடுபடுத்தலுக்கு வருமானத்தின் பங்களிப்பு கணக்கு மற்றும் நிலையான சொத்துக்களின் பெறுமதி சமப்பட வேண்டும் எனினும் பிழையான கணக்கீட்டு சீராக்கல்களின் காரணமாக, அவ்விரு கணக்குகள் இடையே ரூபா 11,435,737 இற்கான வித்தியாசம் ஒன்று ஏற்பட்டுள்ளது.

(எ) தெயட்ட கிருள அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டு சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த புலஸ்திகம நீர்ச் செயற்திட்டத்தின் பெறுமதி ரூபா 6,795,594 தொகை சபையின் சொத்துக்கள் என கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஏ) புலஸ்திகம வாராந்த சந்தை வளவினை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் கீழ், மறைக்கப்பட்ட வர்த்தக சிறு கடைகளின் பெறுமதி ரூபா 7,339,217 தொகை என கோவைகளின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் அவற்றின் பெறுமதி ரூபா 5,920,271 தொகை என காட்டப்பட்டிருந்ததமையால் குறிப்பிட்ட கட்டடத்தின் பெறுமதி ரூபா 1,418,946 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தன.

(ஐ) புலஸ்திகம வாராந்த சந்தையின் திறந்த வர்த்தக சிறுகடைகளின் நிர்மாண வேலைக்கான உண்மையான செலவு ரூபா 6,966,529 தொகை எனினும், நிதிக் கூற்றுக்களில் குறிப்பிட்டுள்ள பெறுமதி ரூபா 5,635,654 என காணப்பட்டுள்ளமையால் குறிப்பிட்ட கட்டடத்தின் பெறுமதி ரூபா 1,330,875 இனால் குறைவாக காட்டடப்பட்டிருந்தது.

(ஒ) புலஸ்திகம வாராந்த சந்தை தரைக்கு கொங்கிரீட் அச்சு கற்கள் பரப்புவதற்கான செலவு ரூபா 1,995,050 தொகையினை, நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஓ) மீளாய்வாணடின் போது தீர்க்கப்பட்டிருந்த முன்னைய ஆண்டிற்கான கடன் கொடுத்தோரின் பெறுமதியை கணக்கீடு செய்யும் போது மீளாய்வாண்டிற்கான செலவு மற்றும் கடன் கொடுத்தோரின் பெறுமதி ரூபா 276,281 இனால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஔ) சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், பதவியணிக் கடன் முற்பணக் கணக்கு மீதி ரூபா 49,392 ஆக காணப்பட்டதுடன் பட்டோலைகளின் பிரகாரம் அவை ரூபா 114,201 ஆக காணப்பட்டமையால் ரூபா 64,809 இற்கான இணக்கமின்மை ஒன்று அவதானிக்கப்பட்டது.

1.3.2 பெற வேண்டிய கணக்குகள்

---------------------------------------------

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 6,612,032 ஆகும். அவற்றில் ரூபா 4,624,637 தொகையினை இனங்கண்டிருக்கவில்லை. அதே போல் அறவிடப்படக்கூடிய துணைச் சேவையின் கீழ் காட்டப்பட்டிருந்த ரூபா 117,194 இற்கான மீதி 9 வருட காலம் தொடக்கமும், நிலுவை இறைச்சிக் கடை வாடகை ரூபா 1,490,780 தொகை 2003 ஆண்டு முதலும் கணக்குகளில் முன் கொண்டுவரப்பட்டிருந்தன.

1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

---

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 39,579,880 இற்கான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமான சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

1.3.4 இணக்கமின்மைகள்

---

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கு இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கு தொடர்பு | இணக்கமின்மைகள் |
| --- | --- |
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டம் | |
| (i) பிரிவு 152(2) | பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் ஏதேனும் தொழில் ஒன்று மேற்கொள்ளும் அனைத்து நபர்களிடமும், சபையினால் அவ்வாறு விதிக்கப்பட்டு அறவீடு செய்வதற்காக அமைச்சர்களினால் குறிப்பாக காட்டப்படும் கட்டளை ஒன்றின் மூலம் விதிக்கப்படும் தொகையினை மிகைக்காத தொகை ஒன்றினை வரியாக சபையினால் துணை விதிகள் ஆக்கப்பட்டு அறவிடப்பட இருந்தும் கூட, அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. |
| (ii) பிரிவு 134 | 2012 அக்டோபர் 31 திகதிய 1782/29 கொண்ட இலங்கை குடியரசின் வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம், லங்காபுர பிரதேச சபை அதிகார பிரதேசத்தில் தல்பொத நகரத்தை முன்னேற்றப்பட்ட பிரதேசம் ஒன்றென பகிரங்கப்படுத்தி இருந்த போதிலும் வீதவரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஆ) 2007 திசெம்பர் 19 திகதிய இலக்கம் 1528/21 கொண்ட வடமத்திய மாகாண முதலமைச்சரின் அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தல் | தலைவர் ஒருவரினால் கடமை பிரயாணங்களுக்காக மாதாந்தம் மேற்கொள்ள வேண்டிய எரிபொருள் வரையான 400 லீட்டர்களை விஞ்சக் கூடாது எனினும் தலைவரினால் மீளாய்வாண்டின் போது அவ் எரிபொருள் வரையறையை மிகைத்து ரூபா 254,496 பெறுமதியான 2132 லீட்டர்கள் டீசல் பயன்படுத்தப்பட்டிருந்தது. |
| (இ) உள்ளூராட்சி மறுசீரமைப்பு சுற்றுநிருப இலக்கம் 03 | |
| (i) 3.1 | சபைக்கு சொந்தமான அரச காணிகள் மற்றும் கட்டடங்களுக்காக உரிமை பத்திரங்கள் பெறுவதற்காக இதுவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ii) 6 மற்றும் 3.7 | அனைத்து சொத்துக்கள் தொடர்பாகவும் வருடாந்த |

கணப்பீடு மேற்கொண்டிருக்கவில்லை.

2 நிதி மீளாய்வு

----------------------

2.1 நிதி விளைவுகள்

--------------------------

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு ரூபா 4,084,286 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு ரூபா 145,832 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

------------------------------

2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

----------------------------------------------------------------------------------------------------------

தலைவரினால் மீளாய்வாண்டிற்காக சமர்பிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | | மதிப்பீட்டு வருமானம் | உள்ளவாறான வருமானம் | திசெம்பர் 31 திகதிய உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (i) | வீதவரி | 150 | 13 | 137 |
| (ii) | வாடகை | 16,422 | 2,702 | 13,720 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,239 | 777 | 462 |
| (iv) | ஏனைய வருமானங்கள் | 37,588 | 17,350 | 20,237 |

2.2.2 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

-------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 1,686,650 தொகையும், முத்திரைக் கட்டணம் ரூபா 234,850 தொகையும் காணப்பட்டன.

3 செயற்பாட்டு மீளாய்வு

---------------------------------

3.1 ஒப்பந்த நிருவாகம்

-----------------------------

மீளாய்வாண்டின் போது சபையினால் புரநெகும செயற்திட்டத்தின் கீழ் பின்வரும் செயற்திட்டங்களுக்காக ஒப்பந்த வேலை உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

| செயற்திட்டம் | ஒப்பந்த வேலை உடன்படிக்கை கையொப்பமிட்டுள்ள திகதி | வேலை பூர்த்தி செய்து ஒப்படைக்க வேண்டிய திகதி | செயற்திட்டத்தின் பெறுமதி |
|---|---|---|---|
| | | | ரூபா |
| ரத்னஸார பாடசாலை மாவத்தை நிர்மானித்தல் | 2014.09.03 | 2015.01.03 | 9,349,610 |
| வாராந்த சந்தை பஸ் நிலையத்தில் சௌகரிக நிலையம் நிர்மாணித்தல் | 2014.09.17 | 2015.06.19 | 30,671,465 |

2015 ஜூலை மாதம் வரையும் இச் செயற்திட்டத்தை பூர்த்தி செய்து சபைக்கு ஒப்படைத்திருக்கவில்லை. அத்துடன் சௌகரிய நிலைய நிர்மாணிக்கும் செயற்திட்டம் 2015 ஜூலை மாதம் வரையும் ஆரம்பித்திருக்கவில்லை.

3.2 பாதீட்டு கட்டுப்பாடு

----------------------------

சபையின் பாதீட்டு வருமானம் மற்றும் உள்ளவாறான வருமானத்தில் நூற்றிற்கு 36 முதல் நூற்றிற்கு 91 வரை முரண் ஒன்று காணப்பட்டதுடன், பாதீட்டு செலவு மற்றும் உள்ளவாறான செலவுகளிடையே நூற்றிற்கு 43 முதல் நூற்றிற்கு 90 வரையான முரண் ஒன்று காண்பட்டமையானது பாதீடு நிதி முகாமைத்துவத்திற்கான கருவி ஒன்றாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

3.3 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

-------------------------------------------------------------------

(அ) மீளாய்வாண்டின் போது சபையின் அதிகார பிரதேசத்தில் முறையான குப்பை முகாமைத்துவ முறைமை ஒன்று செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பிளிஸரு செயற்திட்டத்துடன் ஒன்றினைந்து திண்ம கழிவுப்பொருள் முகாமைத்துவ செயற்திட்டம் ஒன்று ஆரம்பிப்பதற்காக 2012 நவம்பர் மாதத்தின் போது சபைக்கு ரூபா 1,099,511 இற்கான முற்பணத் தொகை ஒன்று சபைக்கு கிடைத்திருத்திருந்தது. எனினும் இந்த செயற்திட்டத்திற்காக பிரதேச செயலாளரினால் வழங்கியிருந்த காணி தொடர்பாக பொது மக்களின் எதிர்ப்பு ஏற்பட்டிருந்தமையால் செயற்திட்ட விடயங்கள் 2015 ஜூலை மாதம் வரையும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

3.4 அகக் கணக்காய்வு

------------------------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது சபையில் அகக் கணக்காய்வு ஒன்று மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. உள்ளூராட்சி திணைக்களத்தினால் போதியளவு கணக்காய்வு ஒன்று சபையில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

4 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

--------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) அகக் கட்டுப்பாடு

(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்